<u>கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் எண்.3, தாராபுரம்</u>
<u>மோட்டார் வாகன விபத்து உரிமைக்கோரிக்கை தீர்ப்பாயம், தாராபுரம்</u>

**<u>MCOP No.55/2023</u>** 05.11.2025 ம.சா.2

சாட்சியின் சாட்சியம் திரு.C.M.சரவணன்,B.A.,L.L.M., கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி (மோ.வா.வி.உ.கோ.தீ) தாராபுரம் அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | ஆறுச்சாமி | தொழில் |
| த/பெ | சுப்பன் | கிராமம் |
| வயது | | தாலுகா |
| ஜாதி | | மாவட்டம் |
| சமயம் | | |

<u>முதல் விசாரணை</u>

சத்தியமாக சொல்கிறேன். நான் இந்த வழக்கில் மனுதாரர் தரப்பு 2 வது சாட்சி. பிரமாண பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும், அவற்றை தெரிந்து கொண்டு தான் நான் அதில் என் கையொப்பங்களை போட்டுள்ளேன்.

**3 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

இந்த வழக்கில் சாட்சியமளிப்பதற்கு எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பானை வரவில்லை என்றாலும் மனுதாரர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க சாட்சியமளிக்க வந்துள்ளேன் என்றாலும் சரிதான். இந்த விபத்தில் இறந்தபோனவரும், மனுதாரர்களும் எனக்கு தெரிந்தவர்கள் என்று சொன்னால் சரிதான். விபத்து தொடர்பாக நான் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான். நான் விபத்தை நேரில் பார்த்திருந்தால் என்னை கண்ணுற்ற சாட்சியாக போலீசார் இறுதியறிக்கையில் சேர்த்து இருப்பார்கள் என்றாலும் அவ்வாறு பார்க்காதால் தான் என்னை சாட்சியாக சேர்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. விபத்தை இருசக்கர வாகன ஓட்டுநரின் அஜாக்கிரதையால் நடந்துள்ளது என்று சொன்னால் சரியல்ல. விபத்து நடந்த ரோடு கிராஸ் ரோடு ஆகும். இருசக்கரவாகனத்தில் வந்தவர் தான் வளைவான சாலை என்பதால் எதிரில் வந்த வாகனத்தை கவனிக்காமல் குறுக்கே கடந்து விபத்தை ஏற்படுத்தி கொண்டார் என்று சொன்னால் சரியல்ல. விபத்து

சமயத்தில் இறந்து போனவர் தலைக்கவசம் அணிந்திருந்தால் தலைக்காயத்தையும் அதனால் ஏற்பட்ட உயிரிழப்பையும் தடுத்திருக்கலாம் என்று சொன்னால் அவர் ஹெல்மெட் அணிந்திருந்தார் அவர் தலைக்கவசம் அணிந்து இருந்ததாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2025.11.05 18:21:51 +0530

3–ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.